

திருப்பூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.4.2026) தமிழ் சுவிசேஷ லுத்ரன் திருச்சபையின் துணைத் தலைவர் அருட்தந்தை ஸ்டான்லி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கிறிஸ்துவ மக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தினேஷ்குமார் உடன் உள்ளார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# காட்பாடி ரெயில்வே மேம்பாலம் 3 மாதங்களில் கட்டி முடிக்கப்படும்!

## அமைச்சர் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் உறுதி!

வேலூர், ஏப். 19-

வேலூர் மாவட்டம் காட்பாடி ரெயில்வே மேம்பாலம் இன்னும் 3 மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்று வாக்கு சேகரிக்கும் போது கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்ட மன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுரு கன் அவர்கள் தொகுதி மக்களை சந் தித்து தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடு பட்டு வருகிறார்.

அவர் பொன்னை, தேன்பள்ளி, மிளகாய் குப்பம் சேனூர் ஊராட்சி மற் றும் அதனை சுற்றியுள்ள கிராமங் களுக்குச் சென்று கிராம மக்களோடு அமர்ந்து கலந்துரையாடினார்.

அப்போது அவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத் திய திட்டங்களை பட்டியலிட்டு எடுத் துக் கூறியும், காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் அவர் செயல்படுத்திய வளர்ச்சி திட்டங்கள் குறித்தும் மக்களி டத்தில் எடுத்துக் கூறி பிரச்சாரம் மேற்கொண்டார். கிராம மக்கள் தங் கள் பகுதியில் வளர்ச்சிக்காக பல் வேறு கருத்துக்களை தெரிவித்தனர். அதை அமைச்சர் துரை முருகன் அவர்கள் கேட்டறிந்தார். பல்வேறு திட் டங்கள் கொண்டு வரப்படும் என்று கூறி அவர் வாக்கு சேகரித்தார்.

அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

என்னைப் பொறுத்தவரை நான் பல ஆண்டுகளாக உங்களோடு இருக்க கூடியவன். இந்த தொகுதிக்கு செய்ய வேண்டியதெல்லாம் செய்து விட்டு அடுத்து வருபவர் களிடம் விட் டுச் செல்ல இருக்கிறேன். நான் முன் னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களோடு 53 ஆண்டுகள் ஒரு சிஷ்யனை போல இருந்துள்ளேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சுறுசுறுப்பை பார்த்து அவருக்கு மறு பெயர் உழைப்பு என்று சொன்னார். அதற்கேற்ப முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உழைப்பை பார்த்தால் எப்போது தூங்குகிறார், எப்போது எழுந்திருக்கிறார் என்பது தெரிய வில்லை. அந்த அளவுக்கு வேகமாக எல்லா நாட்களிலும் தன் பணியை ஆற்றுகிற காரணத்தினால் தான் இந்த தமிழகத்தை கொஞ்சம் நிற்க வைக்க முடிந்தது.

தமிழகத்தில் அனைத்து துறை களை அவர் முன்னேற்றியுள்ளார். தொழிற்சாலைகளை கொண்டு வந்து அவர் உற்பத்தி பெருக்க வேண்டும், மக்களை காப்பாற்ற வேண்டும் என அதற்காக பல திட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறார். காட்பாடி தொகுதியில் பல இடங்கள் அந்த காலத்திலே வளர்ச்சி அடையாமல் இருந்தது. ஆனால் இப்போது அந்த பகுதிகள் வளர்ச்சி அடைந்தது. கழிஞ் சூர் பகுதியை 18 கோடி மதிப்பில் பொழுது போக்கு பூங்கா அமைக் கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் அனைத்து திட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது . காட் பாடி ரெயில்வே மேம்பாலம் கட்டுப் பட்டு வருகிறது .

இன்னும் மூன்று மாதத்தில் அது கட்டி முடிக்கப்படும். எந்த பணி என் றாலும் காட்பாடி தொகுதியில் அதை நான்தான் செய்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

புத்துகோயில் ‘முரசொலி’ முகவர்

# எம்.குமார் இல்லத் திருமண விழா!





## கழக நிர்வாகிகள் வாழ்த்து!

திருப்பத்தர், ஏப்.19-

திருப்பத்தூர் மாவட் டம் நாட்றம்பள்ளி வட் டம் புத்துக்கோயில் முர சொலி முகவர் எம். குமார்-விஜயலட்சுமி தம் பதியரின் மகள் கே. ரம்யா, பி.காம் திருப்பத் தூர் மாவட்டம் ஜோலார் பேட்டை ஜங்ஷன் எஸ். தமிழ்ச்செல்வன் -சசிகலா தேவி ஆகியோரின் மகன் டி.லோகேஷ் இவர்க ளின் திருமணம் நாளை (20.4.2026-திங்கட் கிழமை) அன்று காலை வாணியம்பாடி ஜோலார் பேட்டை நெடுஞ் சாலையில் அமைந்துள்ள சசிபிரியா திருமண மண்டபத்தில் நடை பெறுகிறது.

இத்திருமண விழாவில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



## தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

திராவிட மாடல் அரசின் சிறப்பான திட்டங்கள் தொடர்ந்திட

# முதலமைச்சராக மீண்டும் மு.க.ஸ்டாலின் வர வேண்டும்!

## சைதாப்பேட்டை வாக்குச்சேகரிப்பில் பொதுமக்கள் மா.சுப்பிரமணியனிடம் உறுதி!

சென்னை, ஏப்.19-

மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணி சைதாப் பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட் பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (18-4-2026) சனிக்கி ழமை காலை 7 மணியள வில் சைதை மேற்குப் பகுதி 140வது வட்டத்தில் புனர மைக்கப்பட்ட கோதண்ட ராமர் கோயில் குளத்தைச் சுற்றி நடைப்பயிற்சி மேற் கொண்டார். அங்கு நடைப் பயிற்சிக்கு வந்தோரிடம் உரையாடி, வாக்குச் சேக ரிப்பில் ஈடுபட்டார். அதற் குப் பின்பு காலை சிற்றுண் டிக்குப்பிறகு காலை 9 மணியளவில் சைதை கிழக் குப் பகுதி 172 அ வட்டத் தில் உள்ள காமராஜபுரம், கங்கையம்மன் கோயில் தெரு, நேருநகர் மெயின் ரோடு, பூவிருந்தவல்லி சாலை, ஆலந்தூர் சாலை, 170வது வட்டத்தில் சித்ரா நகர், ஏரிக்கரை சாலை, ஜோதியம்மாள் நகர், வெங் கட்டாபுரம் ஆகிய இடங்க ளில் வாகனத்தில் சென்று வாகனம் ஆங்காங்கே பொதுமக்கள் கூடியுள்ள இடங்களில் திராவிட மாடல் அரசின் சாதனைக ளைப் படைத்துக்கொண்டி ருக்கக்கூடிய உலகநாடுக ளையே வியந்து பார்த்து, அந்தத் திட்டங்களை தங் கள் நாட்டிலும் ஏற்படுத்தி யிருக்கக்கூடிய “காலை உணவுத்திட்டம்” 5ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்க ளுக்கும் வழங்கயிருக்கிறத் திட்டம், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயி ரம் ரூபாயாக உயர்த்தி வழங்கயிருப்பதையும், அதேபோன்று “இல்லத்தரசி கள் திட்டம்” - 8 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்க ளுக்குத் தேவைப்படுவதை தாங்களே தேர்ந்தெடுத் துக்கொள்ளும் திட்டம், அதேபோன்று “புதுமைப் பெண்திட்டம்”, “தமிழ்ப்பு தல்வன் திட்டம்” மேற்ப டிப்பிற்கான நிதிஉதவித் திட்டம், முதியோர் உத வித்தொகை ரூ.1200லிருந்து 2000 ஆயிரமாக உயர்த்தி வழங்கயிருக்கிறத் திட்டம், அதேபோன்று “மாற்றுத்திற னாளிகளுக்கான நிதி உத வித்திட்டம்” இதுபோன்ற திட்டங்களின் சாதனை களை சைதாப்பேட்டை கழக வேட்பாளர் மா.சுப்பி ரமணியன் பொதுமக்களி டம், இந்த திட்டங்களில் உங்களுக்கு எந்தத் திட்டம் பிடித்திருக்கிறது? என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பொதுமக்களும், தங்களுக்குப் பிடித்தத் திட் டங்களை தெரிவித்தனர்.

இத்திட்டங்களெல்லாம் மீண்டும் கிடைக்க வேண்டு மானால், மீண்டும் தமிழ் நாட்டின் முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் வரவேண் டும் என்று பொதுமக்கள் மகிழ்ச்சி பொங்க ஆரவா ரம் செய்தனர்.

இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் பகுதி கழக செய லாளர் இரா.துரைராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், தொகுதிப் பொறுப்பாளர் சைதை சாதிக் உள்ளிட்ட கழகத்தி னர், கூட்டணிக்கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

# மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு முழு ஆதரவு!

## பொதுச் செயலாளர் டி.சி.சேகர் அறிவிப்பு!

திருப்பூர், ஏப்.19-

தி.மு.க. தலைமையி லான மத சார்பற்ற முற் போக்கு கூட்டணிக்கு மிக வும் பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு ஆதரவினை தெரிவிக்கிறது என அதன் பொதுச் செயலாளர் டி.சி. சேகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்தி வரு மாறு:-

திருப்பூர் மாவட்ட மிக வும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் 17.4.2026 அன்று திருப்பூரில் மாநில பொதுச் செயலாளர் சேகர் தலைமையில் நடை பெற்றது.

கூட்டத்தில் MBC கூட்ட மைப்பில் உள்ள சமுதாய சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் வருகிற 2026 தமி ழக சட்டமன்ற தேர்தலில் “சமூக நீதியை கடைபிடிக் கின்ற தி மு க தலைமையி லான மத சார்பற்ற முற் போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகு திகளிலும் பிரச்சாரம் மேற்கொள்வது என்றும், MBC கூட்டமைப்பில் உள்ள சமுதாயத்தினர் தவறாமல் தி மு க கூட்டணிக்கு வாக் களிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு மிகவும் பிற்ப டுத்தப்பட்டோர் கூட்ட மைப்பின் பொதுச் செயலா ளர் டி.சி.சேகர் தெரிவித்து ள்ளார்.

# 13 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

மண்ணில்
13.12.1926



மனதில்
19.4.2013

## செ.குப்புசாமி Ex.M.P.,

தலைவர் – தொ.மு.ச.பேரவை

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த நாள் இன்று!
ஆனது ஆண்டு பதிமூன்று!

மக்கள் அரசின் மாண்பு –
ஜனநாயகத்தின் விடியல்
இவைகளின் முன்மாதிரி “திராவிட மாடல்” வரலாற்றில் –
தொழிற்சங்க விதைகளாய் வாழ்ந்த வேர்முகம்
**செ.குப்புசாமி Ex.M.P.,**
அவர்களின் – நினைவு நாளில்
என்றும் தளபதியாரின் கொள்கை அணிவகுப்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் தளபதி வழியில்

**ராஜா குப்புசாமி**
கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர்

**சுடர்மணி ராஜா** B.B.A., L.L.B.,